**O.S.No. 139/2023**

**Date:31.10.2025**

**வா.சா 1 பூமாரி**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சொத்தில் பாகம் கேட்டு தாக்கல் செய்தேன். வழக்கு சொத்துக்கள் எனது தகப்பனார் மாரியப்பனுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்தேன். மாரியப்ப தேவரின் தகப்பனார் பெயர் உடையார்த்தேவர். மாரியப்ப தேவருக்கு 1ம் பிரதிவாதியை சட்டபூர்வமாக திருமணம் செய்யப்பட்டது. மாரியப்பதேவருக்கும், 1ம் பிரிதிவாதிக்கும் நடந்த திருமணத்தின் பயனாக பிறந்தவர்கள் தான் 2,3 பிரதிவாதிகள் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி இறந்துவிட்டார். 2,3 பிரதிவாதிகள் வயதில் மூத்தவர்கள். மொத்தம் 23 ஏக்கருக்கு வழக்கு தாக்கல் செய்தேன். அதில் பெரும்பான்மையான சொத்துக்கள் 2ம் பிரதிவாதியின் பெயரில் பட்டாவும், சில சொத்துக்கள் மாரியப்ப தேவர் பெயரிலும் பட்டாக்கள் உள்ளது. 2ம் பிரதிவாதியின் பெயரில் உள்ள சொத்துக்களுக்கு 2ம் பிரதிவாதிதான் தீர்வை செலுத்தி வருகிறார். 2ம் பிரதிவாதி தீர்வை செலுத்தி வரும் சொத்துக்களை 2ம் பிரதிவாதி தான் அனுபவித்து வருகிறார். மாரியப்பத்தேவர் பெயரில் உள்ள பட்டாக்களுக்கு நான் தீர்வை செலுத்தவில்லை. அதற்குமே தீர்வை 2ம் பிரதிவாதிதான் செலுத்தி வருகிறார். மாரியப்ப தேவர் பெயரில் உள்ள சொத்துக்களையும் 2ம் பிரதிவாதி தான் அனுபவித்து வருகிறார். மேற்படி வழக்கு சொத்துக்களை 20 ஆண்டுகளாக 2ம் பிரதிவாதி அனுபவித்து வருகிறார். மாரியப்ப தேவர், 1ம் பிரதிவாதியை சட்டபூர்வமாக விவாகரத்து ஏதும் செய்யவில்லை. மாரியப்ப தேவர் உயிருடன் இருக்கும் வரை மாரியப்பதேவருக்கும், 1ம் பிரதிவாதிக்கும் நடைபெற்ற திருமணம் ஊர்ஜிதத்தில் தான் இருந்தது.

மாரியப்பனுக்கும், மகாலட்சுமிக்கும் திருமணம் நடைபெற்று எத்தனை ஆண்டுகள் கழித்து எனது தாயாரை திருமணம் செய்த கொண்டார் என்ற விபரம் எனக்கு தெரியாது. ஊரில் மாரியப்பதேவருக்கும் எனது தாயாருக்கும் திருமணம் நடைபெற்றதாக எனது தகப்பனாரும் எனது பெரியம்மாவும் கூறினார்கள். எனது தாயாரை மாரியப்ப தேவர் அழைப்பிதழ் அச்சிட்டு விமர்சயாக திருமணம் செய்து கொள்ளவில்லை. 2ம் பிரதிவாதி பால்பண்ணை தொழில் வைத்து வியாபாரம் செய்து வருகிறார். எனது தகப்பனார் காலத்தில் இருந்தே பால்பண்ணை தொழில் வைத்து வியாபாரம் செய்து வருகிறார். மாரியப்ப தேவருக்கு பூர்வீக தொழில் விவசாயம் தான் என்றால் சரிதான். எனது வழக்குரையில் மாரியப்பதேவர் விவசாய வருமானத்தை வைத்து தான் அவர் பெயரில் சொத்துக்கள் வாங்கினார் என்றால் சரிதான். அதனால் மாரியப்ப தேவர் வாங்கிய சொத்துக்களும் பூர்வீக சொத்துக்கள் தான். மாரியப்ப தேவரும் பால்பண்ணை வைத்திருந்தார். மாரியப்ப தேவர் பாண்பண்ணை வைத்திருந்தார் என்று எனது வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மாரியப்பதேவர் எனது தாயாரை திருமணம் செய்து கொள்ளவில்லை என்றால் சரியல்ல. மாரியப்பதேவருக்கு ஏற்பட்ட தகாத உறவின் அடிப்படையில் நான் பிறந்தேன் என்றால் சரியல்ல. அதனால் நான் மாரியப்ப தேவரின் சட்டப்படியான வாரிசு கிடையாது என்றால் சரியல்ல. வழக்குரையில் உள்ள 2 முதல் 5, 7 முதல் 11 அயிட்ட சொத்துக்கள் 2ம் பிரதிவாதியின் சுயார்ஜித சொத்துக்கள் என்றால் சரியல்ல. மேற்படி சொத்துக்களுக்கும் மாரியப்ப தேவருக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி சொத்துக்களை 2ம் பிரதிவாதி 31.03.2011ம் தேதி மற்றும் 17.05.2012 தேதிய கிரைய ஆவணத்தின் மூலமாக கிரையம் பெற்ற சொத்துக்கள் என்றால் சரியல்ல. வழக்குரையில் கண்ட 1,6,12 முதல் 22 அயிட்ட சொத்துக்கள் மாரியப்ப தேவரின் பூர்வீக சொத்துக்களில் இருந்து வரும் வருமானத்தை வைத்து கிரையம் பெற்ற சொத்துக்கள் என்றால் சரிதான்.

மேற்கண்ட சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்பதால் இந்து வாரிசுரிமைச் சாட்டப்படி எனக்கு பங்கு பாகம் கிடைக்ககூடியது அல்ல என்றால் சரியல்ல. மாரியப்பதேவர் 1ம் பிரதிவாதியுடன் செய்து கொண்ட திருமணம் ஊர்ஜிதத்தில் இருந்து வந்த நிலையில் அவர் எனது தாயாரை திருமணம் செய்து கொண்டதாக சொல்லக்கூடிய திருமணம் செல்லக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. அந்த திருமணத்தின் அடிப்படையில் பிறந்த எனக்கு தபசில் சொத்துக்களில் எவ்வித பங்கு பாகமும் கிடையாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 ஆவணத்தில் தகப்பனார் பெயர் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.7 ஆவணத்தில் தகப்பனாரின் பெயரின் முன்பாக முதல் எழுத்து தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனது கணவர் வீட்டார் தவறாக அடித்து விட்டார். நான் தவறான ஆவணங்களின் அடிப்படையில் பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் நான் கோரியுள்ள பரிகாரங்கள் கிடைக்கத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல.